செ.வெ.எண்.169 நாள் : 16.12.2016

**பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் தற்காலிகமாக ஏற்படுத்தப்பட்டுள்ள 54 இடங்களில் வர்தா புயலினால் விழுந்த மரங்கள் மற்றும் அதன் கழிவுகளை தனியார்கள் கொண்டு சென்று கொட்டலாம் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில், வர்தா புயலின் தாக்கத்தினால் சாலை மற்றும் பொது இடங்களில் விழுந்த, சேதமடைந்த மரங்கள் மற்றும் மரக்கிளைகளை அகற்றும் பணி போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருகிறது. மரங்கள் மற்றும் மரக்கிளைகளை கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி குப்பைக் கொட்டும் வளாகங்களுக்கு கொண்டு செல்வதனால் ஏற்படும் காலவிரயத்தினை தடுப்பதற்காகவும், விரைந்து மீட்புப் பணி நடைபெறுவதற்காகவும், தற்பொழுது பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட வெவ்வேறு பகுதிகளுக்குள் தற்காலிகமாக 54 காலி இடங்கள் கண்டறியப்பட்டு, சாலைகள் மற்றும் பொது இடங்களிலிருந்து சேகரிக்கப்படும் மரக்கழிவுகள் இவ்விடங்களில் கொட்டப்பட்டு வருகிறது. மேலும், சாலைகள், குடியிருப்பு பகுதிகளிலிருந்து மரங்கள் மற்றும் மரக்கிளைகள் முழுவதுமாக அகற்றப்பட்ட பின் சேகரிக்கப்பட்ட மரங்கள் மற்றும் மரக்கழிவுகளை மறுசுழற்சி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மீதமுள்ள கழிவுகளை கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி குப்பைக் கொட்டும் வளாகங்களுக்கு எடுத்துச் செல்ல நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தற்பொழுது, உட்புறச்சாலைகளில் விழுந்த, சேதமடைந்த மரங்கள் பல்வேறு இடங்களில் அகற்றப்பட்டுவிட்ட நிலையில், குடியிருப்பு, வணிக வளாகங்கள், கல்லூரி வளாகங்கள் மற்றும் இதர பகுதிகளில் விழுந்த, சேதமடைந்த மரக்கழிவுகள் மீண்டும் சாலையோரங்களில் கொட்டப்படுவதால், ஏற்கனவே சாலைகளில் விழுந்த மரங்களை அகற்றும் பணியில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சிரமங்கள் ஏற்படுகிறது. இதன் காரணமாக, பெருநகர சென்னை மாநகராட்சி கீழ்கண்ட 54 இடங்களில் தனியார்கள் தங்களது வளாகம் மற்றும் குடியிருப்பு பகுதிகளில் விழுந்த, சேதமடைந்த மரங்களை மட்டும் கொண்டு சென்று கொட்டிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, திருவொற்றியூர் மண்டலத்திற்குட்பட்ட வார்டு–1 கோத்தகிரி மைதானம், வார்டு–3 அன்னை சிவகாமி நகர் மற்றும் வார்டு–7 சாத்தாங்காடு குப்பைக் கொட்டும் வளாகம் ஆகிய 3 இடங்களிலும், மணலி மண்டலத்திற்குட்பட்ட வார்டு–16 அய்யா கோயில் தெரு 80 அடி சாலை, வார்டு–16 பர்மா நகர் கால்வாய் அருகில், வார்டு–18 சி.பி.சி.எல்.

மைதானம், வார்டு–19 சி.பி.சி.எல். அருகில் 100 அடி சாலை, வார்டு–19 சின்னமாத்தூர் சாலை எம்.எம்.டி.ஏ. அருகில் மற்றும் வார்டு–20 டிரான்ஸ்ஃபர் ஸ்டேஷன் ஆகிய 6 இடங்களிலும், மாதவரம் மண்டலத்திற்குட்பட்ட வார்டு–23 ஜி.என்.டி. சாலை கதிர்வேடு சந்திப்பு, வார்டு–27 மாதவரம் பால்பண்ணை காலிமனை, வார்டு–29 தேவராஜன் தெரு சென்னை குடிநீர் வடிகால் வாரிய இடம் மற்றும் வார்டு–33 எலிசபெத் நகர் ஆகிய 4 இடங்களிலும், தண்டையார்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட வார்டு–37 கொடுங்கையூர் குப்பைக் கொட்டும் வளாகம், இராயபுரம் மண்டலத்திற்குட்பட்ட டிரான்ஸ்பர் ஸ்டேஷன் மற்றும் வார்டு–61 ரமதா இன் எதிரே உள்ள இடம் ஆகிய 2 இடங்களிலும் கொட்டலாம்.

திரு.வி.க.நகர் மண்டலத்திற்குட்பட்ட கார்த்திகேயன் சாலை பெரியார் நகர் மெட்ரோ வாட்டர் இடம், தாங்கல் மயானபூமி, வார்டு–65 ஜம்புலிங்கம் பிரதான சாலை அம்மா உணவகம் அருகில், மக்காரம் தோட்டம், வார்டு–66 ஜவஹர் நகர் விளையாட்டு மைதானம் மற்றும் வார்டு–72 ஆர்.டி.ஓ. அலுவலக விளையாட்டு மைதானம் ஆகிய 6 இடங்களிலும், அம்பத்தூர் மண்டலத்திற்குட்பட்ட வார்டு–86 அத்திப்பட்டு டிரான்பர் ஸ்டேஷன், வார்டு–89 அலுவலர்கள் காலனி இளங்கோ நகர் விளையாட்டு மைதானம் அருகில் மற்றும் வார்டு–93 கோல்டன் ஜார்ஜ் நகர் ஆகிய 3 இடங்களிலும், அண்ணாநகர் மண்டலத்திற்குட்பட்ட வார்டு–99 மெட்ரோ பகுதி ஓ.எஸ்.ஆர். எதிரில், வார்டு–100 பூந்தமல்லி நெடுஞ்சாலை தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் அருகில், வார்டு–101 கிரஸண்ட் மைதானம் மற்றும் வார்டு–101 கீழ்ப்பாக்கம் வாட்டர் ஒர்க்ஸ் எதிரே உள்ள விளையாட்டு மைதானம் ஆகிய 4 இடங்களிலும், தேனாம்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட வார்டு–120 கிருஷ்ணம்பேட்டை மயானபூமி, வார்டு–122 டர்ன்புல்ஸ் சாலை, வார்டு–124 புனித மேரி சாலை மற்றும் வார்டு–125 மைலாப்பூர் மயானபூமி ஆகிய 5 இடங்களிலும், கோடம்பாக்கம் மண்டலத்திற்குட்பட்ட வார்டு–129 சாலிகிராமம் கே.கே.சாலை, வார்டு–130 வடபழனி தேவயானி கல்யாண மண்டபம் எதிரே, வார்டு–134 கார்ப்பரேஷன் காலனி விளையாட்டு மைதானம், வார்டு–136 சோமசுந்தரம் நகர் விளையாட்டு மைதானம், பனகல் பார்க், வார்டு–137க்குட்பட்ட அண்ணா பிரதான சாலை, கோயம்பேடு சந்தை, காளியம்மன் கோயில் தெரு காலிமனை, வார்டு–138 காசி தியேட்டர் அணுகு சாலை மற்றும் வார்டு–139 ஆர்.ஆர். காலனி ஆகிய 10 இடங்களிலும் மரம் மற்றும் அதன் கழிவுகளை கொட்டலாம்.

வளசரவாக்கம் மண்டலத்திற்குட்பட்ட வார்டு–147 ஆற்காடு சாலை (ஏ.ஆர்.எஸ். கார்டன் அருகில்)லும், ஆலந்தூர் மண்டலத்திற்குட்பட்ட வார்டு–158 நந்தம்பாக்கம்–டி.பி.எஃப் (TPF) மற்றும் வார்டு–167 நங்கநல்லூர் 48வது தெரு விரிவு ஆகிய 2 இடங்களிலும், அடையாறு மண்டலத்திற்குட்பட்ட எம்.ஆர்.சி. நகர், வார்டு–175 கோட்டூர்புரம் இரயில்வே நிலையப் பகுதி,

வார்டு–176 அஷ்லட்சுமி கோயில் அருகில் மற்றும் வார்டு–180 ராஜீவ் காந்தி சாலை நேஷனல் பேஷன் டெக்னாலஜி எதிரே ஆகிய 4 இடங்களிலும், பெருங்குடி மண்டலத்திற்குட்பட்ட வார்டு–185 பாலவாக்கம் பல்கலை நகர் மற்றும் வார்டு–186 பெருங்குடி குப்பைக் கொட்டும் வளாகம் ஆகிய 2 இடங்களிலும், சோழிங்கநல்லூர் மண்டலத்திற்குட்பட்ட வார்டு–186 பெருங்குடி குப்பைக் கொட்டும் வளாகம் மற்றும் வார்டு–196 ஈஞ்சம்பாக்கம் மயானபூமி ஆகிய 2 இடங்களிலும் மரங்கள் மற்றும் அதன் கழிவுகளை தனியார்கள் தாமாகவே சென்று கொட்டலாம்.

சாலை மற்றும் பொது இடங்களில் விழுந்த மரங்களை அகற்றும் பணி பெருநகர சென்னை மாநகராட்சியின் 19411 பணியாளர்கள் மற்றும் பிற மாவட்டங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட 3009 பணியாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கு எவ்வித கட்டணமோ, பணமோ மற்றும் பொருளோ செலுத்த தேவையில்லை. இதுகுறித்து ஏதேனும் புகார் தெரிவிக்க விரும்பினால் 1913 என்ற எண்ணிலும், 044–2561 9206, 2561 9511, 2538 4965, 2538 3694, 2536 7823, 2538 7570 என்ற பெருநகர சென்னை மாநகராட்சி கட்டுப்பாட்டு அறை தொலைபேசி எண்களிலும் தெரிவிக்கலாம். மேலும், பொதுமக்கள் மரங்கள் மற்றும் அதன் கிளைகளை சாலைகளில் போடாமல், துப்புரவு செய்யும் பணியில் அனைத்து பொதுமக்களும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு முழு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**